71

<u>சுருக்கம்</u>

நகர்ப்புற வளர்ச்சி - 2025-2026 ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு அமைச்சர் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அவர்களின் அறிவிப்புகள்- அறிவிப்பு எண். 5 - 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் விற்கப்பட்ட தனிமனையினை (Sold plot) எந்தக்காலக்கெடுவும் இல்லாமல் இணைய வழி மூலம் விண்ணப்பித்து வரன்முறைப்படுத்திக்கொள்ளுதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [ந.வ.4(1)] துறை</u>

அரசாணை (நிலை) எண். 71

நாள்: 21.05.2025
விசுவாவசு வருடம் , வைகாசி-07,
திருவள்ளுவர் ஆண்டு 2056

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 04.05.2017.
2. அரசாணை (நிலை) எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 13.10.2017.
3. அரசாணை நிலை எண்.55, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 02.05.2018.
4. அரசாணை (நிலை) எண்.21, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 05.02.2019.
5. அரசாணை (நிலை) எண்.16, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [ந.வ.4(1)] துறை, நாள் 25.01.2021.
6. அரசாணை (நிலை) எண்.40, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [ந.வ.4(1)] துறை, நாள் 26.02.2021.
7. அரசாணை (நிலை) எண்.118, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [ந.வ.4(1)] துறை, நாள் 04.09.2023.
8. அரசாணை (நிலை) எண்.166, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [ந.வ.4(1)] துறை, நாள் 21.11.2023.

..2

Verified RealEstate™

9. மாண்புமிகு அமைச்சர் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அவர்களது அறிவிப்புகள் அறிவிப்புஎண்-5.
10. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.24461/2024/ TCP 1, நாள் 23.04.2025.
11. அரசாணை (நிலை) எண்.70, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் ந.வ.4(1)] துறை, நாள் 15.05.2025.

------------

<u>ஆணை:</u>

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் அனுமதியற்ற மனைப்பிரிவு ஏற்படுத்தப்பட்டு அதில் குறைந்தபட்சம் ஒரு மனையாவது விற்கப்பட்டு அதற்கான விற்பனைப்பத்திரம் 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்டிருப்பின் அந்த மனைப்பிரிவில் அமையும் விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத அனைத்து மனைகள் மற்றும் மனைப்பிரிவையும் வரன்முறைப்படுத்த அந்த விதிகள் வெளியிடப்பட்ட ஆறு மாதங்களுக்குள் கட்டாயமாக விண்ணப்பிக்க வேண்டும் என ஆணை வெளியிடப்பட்டது.

2. மேற்குறிப்பிட்ட காலவரையறையினை மேலே இரண்டிலிருந்து எட்டு வரை படிக்கப்பட்ட அரசாணைகள் மற்றும் பதினொன்றில் படிக்கப்பட்ட அரசாணையின் வழி 30.06.2026 வரை நீட்டிக்கப்பட்டது.

3. 2025-2026-ஆம் ஆண்டிற்கான சட்டப்பேரவை மானியக்கோரிக்கையின் போது, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிப்பு எண்.5-இல் பின்வருமாறு அறிவிக்கப்பட்டது:-

> "20.10.2016-க்கு முன் அமைக்கப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவுகளில், மேற்கண்ட தேதிக்கு முன் பதிவு செய்யப்பட்ட தனிமனைகளுக்கு எந்த காலக்கெடுவும் இல்லாமல் மனு பெறப்பட்டு வரன்முறை செய்து கொடுக்கப்படும்"

---3-

Verified RealEstate™

4. மேலே உள்ள அறிவிப்பு தொடர்பாக, மேலே பத்தாவதாக படிக்கப்பட்ட நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடிதத்தில் 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன் அமைக்கப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவுகளில் தனி மனையாக வாங்கிய பொதுமக்கள் வரன்முறைக்கு உரிய காலத்தில் விண்ணப்பிக்காமல் இருந்தாலும் அவர்கள் பயன்பெறும் வகையில், 20.10.2016-க்கு முன்பதிவு செய்யப்பட்ட விற்பனை ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு அம்மனையினை எவ்வித காலக்கெடுவுமின்றி இணைய வழி மூலம் விண்ணப்பித்து ஏற்கனவே உள்ள விதிகளில் எவ்வித மாற்றமும் இன்றி வரன்முறைப்படுத்த ஆணை வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

5. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் மேற்காணும் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து, 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன் அமைக்கப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவுகளில் தனிமனையினை வாங்கிய பொதுமக்கள் வரன்முறைக்கு உரிய காலத்தில் விண்ணப்பிக்காமல் இருந்தாலும் அவர்கள் பயன்பெறும் வகையில், 20.10.2016-க்கு முன் பதிவு செய்யப்பட்ட விற்பனை ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு அத்தனிமனையினை எவ்வித காலக்கெடுவுமின்றி இணைய வழிமூலம் விண்ணப்பம் பெற்று ஏற்கனவே உள்ள விதிகளில் மாற்றமில்லாமல் வரன்முறைப்படுத்திக் கொள்ளலாம் என அரசு இதன் மூலம் ஆணை வெளியிடுகிறது.

6. தமிழ்நாடு அங்கீகரிக்கப்படாத மனைபிரிவுகள் மற்றும் மனைகளை வரன்முறைப்படுத்தும் விதி 2017-க்கான உரிய திருத்தம் பின்னர் வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

அரசு கூடுதல் தலைமைச்செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை,
சென்னை-600 009.

அரசு கூடுதல் தலைமைச்செயலாளர்.
வருவாய் மற்றும்பேரிடர் மேலாண்மைத்துறை,
சென்னை-600 009.
அரசு முதன்மைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை-600 009.
அரசு முதன்மைச் செயலாளர், (நிதி),
சென்னை-600 009.
அரசுச் செயலாளர், சட்டத் துறை, சென்னை-600 009.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை – 600 107.
உறுப்பினர்-செயலர்,
சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம்,
சென்னை- 600 008.

<u>நகல்:</u>

மாண்புமிகு அமைச்சர் (வீட்டு வசதி மற்றும்
மது விலக்கு & ஆயத் தீர்வை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை - 600 009.
அரசு தலைமைச் செயலாளர்
அவர்களின் முதன்மைச் தனிச் செயலர், சென்னை-600 009.
அரசு கூடுதல் தலைமைச்செயலாளரின் தனிச் செயலர்,
வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை,
சென்னை - 600 009.
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்
(அ.ந.மு-1/ வரவு செலவு) துறை, சென்னை - 600 009.
பொதுத் (SC) துறை, சென்னை-600 009.
இருப்புகோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

21/5/25

பிரிவு அலுவலர்

21/05/2025

Verified RealEstate ™